# IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

**OS. No.** 118/2008 **Date**: 25.06.2025

PW1- ராஜு

சாட்சி மீண்டும் முன்னிலையானதன் பேரில் 27 முதல் 29 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

தாவா சொத்தில் ரங்கையகவுண்டருக்கு 2/8 பாகம் உரிமை உள்ளது என்றால் சரிதான். செல்லப்பகவுண்டர், ரங்கையகவுண்டர், வரதப்பகவுண்டர் ஆகியோர் தாவா சொத்துக்களை வாய்மொழியாக பாகம் பிரித்து அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. ரங்கையகவுண்டர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவருக்கு ராமசாமி, செல்லப்பன் ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். அதனால் ராமாசாமி செல்லப்பனுக்கும் தாவா சொத்தில் தலா 1/8 பாகம் உரிமை உள்ளது என்றால் சரிதான். அந்த பாகத்தை அவர்களுக்குள் வாய்மொழியாக பாகம் பிரித்து கொண்டு அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு பாகம் பிரித்த சொத்தை ராமாசாமி 4-ம் பிரதிவாதி மல்லிகாவிற்கு விற்பனை செய்துவிட்டார் என்றால் சரிதான். செல்லப்பனுக்கு 4 முதல் 7 பிரதிவாதிகள் வாரிசுகள் என்றால் சரிதான். மல்லிகா இறந்துவிட்டார். அவருக்கு சுமதி, செந்தில்முருகன் வாரிசுகள் என்றால் சரிதான். செந்தில்முருகன் இறந்துவிட்டார். அவருக்கு 27 முதல் 29 வரையான பிரதிவாதிகள் வாரிசுகள். அவர்கள் தான் மல்லிகா பாக சொத்தை தனிப்பட்ட முறையில் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அந்த பாகம் 1/8 பாகம் என்றால் சரியல்ல. செல்லப்பன் வாரிசு என்ற முறையில் மல்லிகாவிற்கு 1/32 பாகம் உரிமை உள்ளது என்றால் சரிதான். அந்த பாகத்தையும் செல்லப்பன் வாரிசுகளும், மல்லிகா வாரிசுகளும் தனிப்பட்ட முறையில் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அதனால் அந்த சொத்தை பாகம் பிரிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. 3-ம் பிரதிவாதி மணி இறந்துவிட்டார். நான் அதில் கலந்து கொள்ளவில்லை. அவர்களின் வாரிசு ராஜு மட்டும் தான் உள்ளார். அதனால் 27 முதல் 29 வரையான பிரதிவாதிகளை பொறுத்து தாவா தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/-ராஜு

ஒப்பம்/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.